MGS – PAPER 5

**605 / 12**
தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள்



பெயர் : ______________________

வகுப்பு : ______________________

தேதி : ______________________

| |
|---|
| / 90 |




பெற்றோர் கையொப்பம் : ______________________

**A1 வேற்றுமை**
**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்**



More papers at www.testpapersfree.com

**சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. விமலா தன் வீட்டுக்கு அருகே உள்ள தேசிய நூலகத்தின் ____________ பணிபுரிந்தாள்.

(1) அலுவலகத்தின்
(2) அலுவலகத்தில்
(3) அலுவலகத்திற்கு
(4) அலுவலகத்திலிருந்து ( )

Q2. ________________ வெளியே நடந்து சென்றுகொண்டிருந்த முதியவரின் கைப்பையை ஒருவன் பறித்துக்கொண்டு ஓடினான்.

(1) வங்கியோடு
(2) வங்கியில்
(3) வங்கிக்கு
(4) வங்கியால் ( )

Q3. அறநெறி புத்தகங்களை படிப்பதனால் ______________ நல்ல பண்புகளைக் கற்க முடியும்.

(1) மாணவர்களது
(2) மாணவர்களால்
(3) மாணவர்களிடம்
(4) மாணவர்களிடமிருந்து ( )

Q4. பினாங்கு ________________ பார்த்தபோது இயற்கையின் அழகு என் மனதை வெகுவாகக் கவர்ந்தது.

(1) மலைக்கு
(2) மலையில்
(3) மலையுடன்
(4) மலையிலிருந்து ( )

Q5. வாணி இயற்றிய ______________ அவளது நண்பர்கள் கேட்டுப் பாராட்டினார்.

(1) பாடலுக்கு
(2) பாடலை
(3) பாடலுடன்
(4) பாடலால் ( )

**<u>A2 செய்யுள் / பழமொழி</u>**

**Q6 முதல் Q10 வரையுள்ள <u>செய்யுள் / பழமொழியை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**



More papers at www.testpapersfree.com

Q6. ஐயம் _______________ உண்.

(1) விட்டு
(2) போடு
(3) இட்டு
(4) தொட்டு ( )

Q7. மந்திரிக்கு அழகு _______________ உரைத்தல்.

(1) கற்றுணர்ந்து
(2) வரும்பொருள்
(3) விருந்துடன்
(4) மெய்ப்பொருள் ( )

Q8. இளமையில் கல்வி _______________ எழுத்து.

(1) முதுமையில்
(2) சிலையில்
(3) முடிவில்
(4) கல்லில் ( )

Q9. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி _______________ கற்றனைத் தூறும் அறிவு.

(1) அறிஞர்க்கு
(2) மாந்தர்க்கு
(3) மன்னர்க்கு
(4) சான்றோர்க்கு ( )

Q10. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்

_______________ மிக்க கொளல்.

(1) அன்புநாடி
(2) சுவாய்நாடி
(3) பகைநாடி
(4) மிகைநாடி ( )

<u>**A3 அடைமொழி / எச்சம்**</u>

**Q11 முதல் Q15 வரையுள்ள <u>அடைமொழி / எச்சத்தை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. தேசிய தின நிகழ்ச்சியை _______________ அதிபர் மகிழ்ச்சியடைந்தார்.



More papers at www.testpapersfree.com

(1) ஆற்றிய
(2) கண்ணுற்ற
(3) செவியுற்ற
(4) வழங்கிய ( )

Q12. தீபாவளி அன்று தொலைக்காட்சியில் ________________ தமிழ் திரைப்படங்களை அனைவரும் ரசித்துப் பார்த்தனர்.

(1) ஒளிபரப்ப
(2) ஒளிபரப்பாகி
(3) ஒளிபரப்படுகிற
(4) ஒளிபரப்பப்பட்ட ( )

Q13. ராமு உடைந்து கிடந்த கண்ணாடித் துண்டுகளை ______________ குப்பைத் தொட்டியில் போட்டான்.

(1) எடுக்கிற
(2) எடுத்து
(3) எடுக்கும்
(4) எடுத்த ( )

Q14. குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி தங்கள் வேலைகளை ______________ சிறப்பாக செய்தனர்.

(1) சிறப்பாக
(2) சிறப்பான
(3) சிறந்து
(4) சிறப்பு ( )

Q15. கதிரவன் ________________ வானம் இருண்டது.

(1) மறைய
(2) மறைகின்ற
(3) மறையும்
(4) மறைக்க ( )

**<u>A 4 முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>**

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

ராகவன் ஒரு விளையாட்டு வீரன். அவன் பல்வேறு போட்டிகளில் கலந்து பரிசு பெற்று வந்தான். அவனுடைய **Q16** ________________ கண்டு அவனை பலரும் வெகுவாகப் பாராட்டினார்கள். அவனுடைய சுற்றத்தாரும் அவனை நல்ல உதாரணமாக சுட்டிக்காட்டி, அவனைப் போல் நடந்துகொள்ளும்படி தங்கள்



More papers at www.testpapersfree.com

பிள்ளைகளிடம் கூறுவார்கள். ராகவன் தம் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாகத் திகழ்கிறான் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனாலும் அவனிடம் ஒரு **Q17** _______________ பழக்கம் இருந்தது அவர்களுக்குத் தெரியாது.

தீய நண்பர்களுடன் சகவாசம் வைத்திருந்த ராகவன், புகைபிடிக்கும் பழக்கத்தை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டான். அவனுடைய பெற்றோர் அவனிடம் பலமுறை அதை நிறுத்த **Q18** _______________ அவனால் அப்பழக்கத்தை கைவிடமுடியவில்லை. ஒருமுறை ராகவன் பேருந்து நிறுத்தும் இடத்தில் பேருந்துக்காகக் காத்துக்கொண்டிருந்தான். அவன் அங்கு நின்று புகைபிடித்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் ஏற வேண்டிய பேருந்து வந்தது. அதனால் அவசரத்தில், அவன் தன் சிகரெட் துண்டை தூக்கி வீசினான். அந்தச் சிகரெட் துண்டு **Q19** _______________ ஒரு பெண்ணின் காலில் பட்டது. வலி தாங்க முடியாமல் அவர் ராகவனை வாய்க்கு வந்த படி திட்டினார். அங்கிருந்த மற்றவர்கள் ராகவனை **Q20** _______________ பார்த்தனர். அதனால் ராகவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. அன்று முதல், தான் தலை குனிய காரணமாக இருந்த அந்தச் சிகரெட்டை ராகவன் விட்டொழித்தான்.

Q16. (1) தளர்ச்சியை
(2) முதிர்ச்சியை
(3) வெற்றியை
(4) நெகிழ்ச்சியை ( )

Q17. (1) நல்ல
(2) பிடிக்காத
(3) பிடித்த
(4) கெட்ட ( )

Q18. (1) அறிவித்தும்
(2) கூறியும்
(3) கேட்டும்
(4) அழுதும் ( )

Q19. (1) தற்காலிகமாக
(2) வேண்டுமென்றே
(3) கவனமில்லாமல்
(4) தற்செயலாக ( )

Q20. (1) மரியாதையாக
(2) ஆத்திரமாக
(3) பாசமாக
(4) ஏளனமாக ( )



More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

முன்னொரு காலத்தில், தேவன் என்ற ஒரு வேலைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஏழையாக இருந்தாலும் மதிநுட்பம் நிறைந்தவன். தேவன் ஒரு செல்வந்தருடைய வீட்டில் பணிபுரிந்தான். ஒருநாள் சமையற்காரன் வராததால் தேவன் செல்வந்தருக்குச் சமைத்துக் கொடுத்தான். அந்த உணவின் சுவையில் மயங்கிய செல்வந்தர், அவனைத் தன் வீட்டின் சமையற்காரனாக நியமித்தார்.

அன்று செல்வந்தரின் பிறந்தநாள். பிறந்தநாள் விழாவிற்கு அவர் தன் நண்பர்களை அழைத்திருந்தார். அவருடைய நண்பர்கள் தேவனுடைய சமையல் திறமையை முன்பே அறிந்திருந்தார்கள். அதனால், செல்வந்தர் தேவனை அழைத்துத் தன் நண்பர்களுக்குச் சுவையான உணவு வகைகளை சமைக்கும்படிக் கூறினார். அதற்கு தேவன் **இசைந்தான்**.



More papers at www.testpapersfree.com

அன்றைக்கு செல்வந்தரின் தோழர்கள் , வந்தார்கள். தேவன் அவர்களுக்கு உணவைப் பரிமாறத் தொடங்கினான். அப்போது செல்வந்தர் " தேவன், இன்று நீ என்ன சமைத்தாய்?" என்று வினவினார். அதற்கு அவன், தான் அறுசுவை உணவு வகைகளை சமைத்திருப்பதாகக் கூறினான். தேவனின் ருசியான உணவைச் சாப்பிட அவருடைய நண்பர்கள் அவனை வெகுவாக மெச்சினார்கள்.

சிலநாட்களுக்குப் பிறகு , வியாபாரத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் சீற்றத்துடன் செல்வந்தர் வீட்டுக்கு வந்தார். கோபத்தோடு அவர் அவனை அழைத்து, "தேவா! இன்று நீ சமைத்த அனைத்து உணவுகளையும் எனக்கு வந்து பரிமாறு!" என்று கட்டளையிட்டார். தேவன் தான் சமைத்த உணவை எடுத்து வந்து செல்வந்தருக்குப் பரிமாறினான். அதைச் சாப்பிட்ட செல்வந்தர், "பாகற்காயை இன்று நீ சுவையாக சமைத்திருக்கிறாய்! எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது," என கூறினார்.

அதற்குத் தேவன் , "ஐயா, அறுசுவைகளில் இந்தக் கசப்பான பாகற்காய் உங்களுக்குத் பிடித்திருக்கிறது. அதைப்போல் நம் வாழ்க்கையில் வரும் துன்பத்தையும், தோல்வியையும், நட்டத்தையும் ஏன் உங்களால் தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ள முடியவில்லை?" என்று பணிவோடு கேட்டான். அதைக் கேட்ட செல்வந்தர் சிந்திக்கத் தொடங்கினார்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q21. தேவனுக்கு எவ்வாறு சமையற்காரன் வேலை கிடைத்தது?

(1) தேவன் ஏழையாக இருந்ததால்
(2) தேவன் நன்றாக வேலை செய்ததால்
(3) தேவன் சமைத்த உணவு சிசுவையாக இருந்ததால்
(4) தேவன் தன்னம்பிக்கையுடையவனாக திகழ்ந்ததால் ( )

Q22. செல்வந்தர் தன் நண்பர்களை வீட்டுக்கு அழைக்க காரணம் என்ன?

(1) அறுசுவை உணவைச் சமைக்க
(2) நண்பர்கள் தேவனை மெச்ச
(3) தேவனின் சமையல் திறனை அறிய
(4) தன் பிறந்தநாளைக் கொண்டாட ( )

Q23. தேவன் கசப்பான பாகற்காயை எதோடு ஒப்பிட்டான்?



More papers at www.testpapersfree.com

(1) மனிதனின் வாழ்க்கையோடு
(2) வாழ்க்கையில் வரும் இன்னலோடு
(3) செல்வந்தரின் கோபத்தோடு
(4) கசப்பான சுவையோடு ( )

Q24. தேவன் கூறிய விளக்கத்திலிருந்து அவன் எப்படிப்பட்டவன் என்று நாம் அறியலாம்?

(1) சுவையான உணவைச் சமைக்க கூடியவன்
(2) தன்னம்பிக்கை உடையவன்
(3) விருந்தினர்களை நன்றாக உபசரிபவன்
(4) புத்திகூர்மை உடையவன் ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. இசைந்தான்
(1) சம்மதித்தான்
(2) நகைத்தான்
(3) மறித்தான்
(4) தீர்மானித்தான் ( )

<u>**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**</u>

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q26. | கடந்த ஒரு வருடமாக என் பள்ளியில் புதுப்பிப்பு ______________ நடைபெற்று வருகின்றது. இப்போது என் பள்ளி பார்ப்பதற்குப் புதிதாக காட்சியளிக்கிறது. | Q26 ( ) |
| Q27. | குண்டர் கும்பல் ஒன்று மற்றொரு கும்பலுடன் ___________ செய்ய ஆரம்பித்தது. காவலர்கள் அங்கே சென்று அவர்களைக் கைது செய்தனர். | Q27 ( ) |
| | | Q28 ( ) |




More papers at www.testpapersfree.com


| | | |
|---|---|---|
| Q28. | பிரதமரின் தேசியத் தின உரையைக் கேட்க ____________ குடியிருப்பாளர்களும் திரளாகத் திடலில் கூடினார்கள். | |
| Q29. | வயதானவர் நடக்க சிரமப்பட்டார். அதனால், அவர் ____________ ஊன்றி மெல்ல நடக்க பழகினார். | Q29 (   ) |


| | |
|---|---|
| (1) அணைத்து | (5) கோல் |
| (2) பணி | (6) பனி |
| (3) கழகம் | (7) அனைத்து |
| (4) கோள் | (8) கலகம் |

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

**சிங்கப்பூர்த் தமிழ் இளையர் மன்றம் வழங்கும் நாடகப் பயிலரங்கு**





- ❖ பள்ளி விடுமுறையை முன்னிட்டு 10 வயது முதல் 14 வயது மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படும் பயிலரங்கு
- ❖ சிறப்பு விருந்தினர் பிரபல நடிகர் ஆனந்த் நாடகப் பயிலரங்கில் கலந்துகொள்வோருக்கு நாடகச் சான்றிதழை வழங்குவார்
- ❖ நடிகர் ஆனந்த் மாணவர்களுடன் கலந்துரையாடுவார்

**காலத்தைக் கடத்தாமல் இப்பொழுதே பதிவு செய்யுங்கள்**

- ❖ பதிவுப் படிவத்தைப் புக்கிட் பாஞ்சாங் சமூக மன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம் .
- ❖ பதிவுப் படிவத்தில் பெற்றோரின் தொடர்பு விவரங்களைக் கட்டாயம் பூர்த்திச் செய்ய வேண்டும்.

More papers at www.testpapersfree.com

**சிறப்புச் சலுகை**

- நாடகப் பயிலரங்கில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு மாணவனுக்கும் டிசம்பர் 26 - ஆம் தேதி அன்று அரங்கேறும் அரவிந்தத் நாடக மன்றத்தினரின் மாபெரும் படைப்பான 'நல்ல மனம்' என்னும் புகழ்பெற்ற நாடகத்தைப் பார்க்க 2 இலவச நுழைவுச் சீட்டுகள் வழங்கப்படும்.
- மேல் விவரங்களுக்கு 98295967 என்ற தொலைபேசி மூலம் திரு அன்பழகனுடன் தொடர்பு கொள்ளலாம்.

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்னை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. இந்தப் பயிலரங்கின் முக்கிய நோக்கம் என்ன?

(1) நாடகத்தின் மீது மாணவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்வது
(2) பள்ளி விடுமுறையை மாணவர்கள் பயனுள்ள வழியில் கழிப்பதற்கு
(3) பிரபல நடிகர் ஆனந்தைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்துவது
(4) 'நல்ல மனம்' என்னும் புகழ்பெற்ற நாடகத்தைப் பார்க்க வாய்ப்பு அளிப்பது

( )

Q31. நிகழ்ச்சிக்குப் பதிவு செய்வோர் எதை முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்?

(1) திரு அன்பழகனுடன் தொடர்புகொள்வதை
(2) பெற்றோருடன் சென்று பதிவு படிவத்தை பெறுவதை
(3) பதிவுப் படிவத்தை இளையர் மன்றத்தில் பெற்றுக்கொள்வதை
(4) பதிவு படிவத்தில் பெற்றோரின் தொடர்பு விவரங்களை பூர்த்தி செய்வதை

( )

Q32. இப்பயிலரங்கின் ஏற்பாட்டாளர்கள் யார்?

(1) புக்கிட் பாஞ்சாங் சமூக மன்றத்தினர்



More papers at www.testpapersfree.com

(2) சிங்கப்பூர் நடிகர் மன்றத்தினர்
(3) அரவிந்த் நாடக மன்றத்தினர்
(4) சிங்கப்பூர் தமிழ் இளையர் மன்றத்தினர் ( )

Q33. நாடகப் பயிலரங்கில் பங்குபெறும் மாணவர்கள் எவற்றைப் பெறுவர்

( 4 மதிப்பெண்கள் )

________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
____________________

**D8 சுயவிடை கருத்தறிதல்**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

ஒரு சமயம் முரளி வெளிநாட்டுக்குப் பயணம் சென்றிருந்தான். அங்கு அவனது நண்பன் ரவியின் பெரிய வீட்டில் முரளி தங்கியிருந்தான். அந்த வீடு பசுமையான இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில அமைந்திருந்தது. அவ்விடம் முரளிக்கு மன அமைதியைக் கொடுத்தது. அங்கே நிறைய பிராணிகளும் வளர்க்கப்பட்டன. ஒருநாள் மாலை, பண்ணையில் முரளி உலாவிக்கொண்டிருந்தான். அவனுடன் ரவியும் அவனது தங்கையும் நடந்து சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது, சற்றும் எதிர்பாராத விதமாக அடுத்த வீட்டுக் காவல்நாய் அவர்களை நோக்கி ஓடி வந்தது. அதன் வெறித்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன ரவியின் தங்கை அப்படியே மயங்கி விழுந்துவிட்டாள். ரவி தங்கையைத் தூக்க முயன்றான். அப்போது அந்த நாய் அவர்களை நெருங்கி வந்துவிட்டது. ரவிக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை . ரவி உடனே எழுந்து வேறு திசையில் ஓடினான். ஆனால் , முரளியோ அப்படியே அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்றுவிட்டான்.

விரைந்து வந்த நாய் கிழே விழுந்து கிடந்த ரவியின் தங்கையையும் முரளியையும் பொருட்படுத்தவில்லை. அது தன் கவனத்தை ஓடிக்கொண்டிருந்த ரவியின்மீது திருப்பி அவனைத் துரத்தியது. நல்ல வேளையாக அவன் ஒரு மரத்தில்



More papers at www.testpapersfree.com

ஏரித் தப்பித்தான். அதன் பிறகே பக்கத்து வீட்டக்காரர் ஓடி வந்து நாயைக் கட்டிப் போட்டார். அப்போதுதான் முரளி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

முரளி இருக்கும் இடத்திற்கு வந்த ரவிக்கோ ஒரே வியப்பு . அச்சமயத்தில் ரவியின் தங்கையும் மயக்கம் தெளிந்து எழுந்தாள். " சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில உறுதியாக உன்னால் எப்படி நிற்க முடிந்தது? " என்று ரவி கேட்டான். அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த முரளி, " நான் வித்தியாசமாக எதையும் செய்து விடவில்லை . வருவது வரட்டும் , சமாளிப்போம் என்ற ஒருவித மனஉறுதியுடன் நின்றுவிட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களின் குணம். அதனால்தான் அந்தக் காவல்நாய், என்னை விட்டுவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் உன்னைத் துரத்தியது , " என்று பதிலளித்தான். உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, பயந்து ஓடாமல், வருவது வரட்டும் என்று மனவுறுதி பெற்றிருந்த முரளியைப் பார்த்து ரவி பெரிதும் வியந்தான்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. ( 22 மதிப்பெண்கள் )**

Q34. அந்தப் பெரிய வீடு முரளிக்கு ஏன் மன அமைதியை அளித்தது?
( 2 மதிப்பெண்கள் )

________________________________________

Q35. ரவியின் தங்கை மயங்கி விழக் காரணம் என்ன? ( 3 மதிப்பெண்கள் )

________________________________________

Q36. முரளியும் ரவியும் நாயிடமிருந்து எப்படித் தப்பித்தார்கள்?
( 3 மதிப்பெண்கள் )



More papers at www.testpapersfree.com

Q37. எப்போது முரளி அவன் இருந்த இடத்தை விட்டு நகர்ந்தான்? ( 3 மதிப்பெண்கள் )

Q38. "அந்த ஆபத்தான நேரத்திலும் ..............." என்ற சொற்றொடர் எந்தக் கருத்தைக் குறிக்கிறது? ( 3 மதிப்பெண்கள் )

Q39. காவல்நாய் ஏன் ரவியைத் துரத்தியது என்று முரளி கூறினான்? ( 4 மதிப்பெண்கள் )



More papers at www.testpapersfree.com

Q40. நீ உன்னை ரவியாகக் கற்பனை செய்துகொள். முரளியிடம் காணப்பட்ட இரண்டு பண்புகளை சுட்டிக் காட்டி உன் நண்பன் பாலாவுக்கு ஒரு குறிப்பு எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள பாலா,

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

____________

இப்படிக்கு,
உன் அன்புத் தோழன் ரவி.







More papers at www.testpapersfree.com

# MGS PAPER 5

| | | |
|---|---|---|
| Q1) 2 | Q11) 2 | Q21) 3 |
| Q2) 3 | Q12) 4 | Q22) 4 |
| Q3) 2 | Q13) 2 | Q23) 2 |
| Q4) 4 | Q14) 1 | Q24) 4 |
| Q5) 2 | Q15) 1 | Q25) 1 |
| Q6) 3 | Q16) 3 | Q26) 2 |
| Q7) 2 | Q17) 4 | Q27) 8 |
| Q8) 2 | Q18) 2 | Q28) 7 |
| Q9) 2 | Q19) 4 | Q29) 5 |
| Q10) 4 | Q20) 4 | Q30) 2 |
| | | Q31) 4 |
| | | Q32) 4 |

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

33) நாடக பயிலரங்கில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பிரபல நடிகர் ஆனந்திடம் இருந்து சான்றிதழை பெறுவதுடன் ~~மற்றும்~~ அவருடன் கலந்துரையாடுவர். மேலும் டிசம்பர் 26-ஆம் தேதி அரங்கேறும் அரவிந்த நாடக மன்றத்தின் மாபெரும் படைப்பான 'நல்ல மனம்' என்னும் புகழ்பெற்ற நாடகத்தை பார்க்க 2 இலவச நுழைவுச் சீட்டுகளை பெறுவர்.

34) பசுமையான இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் அந்த பெரிய வீடு அமைந்திருந்தது. அதனால் அது முரளிக்கு மன அமைதியை அளித்தது.

35) சற்றும் எதிர்பாராத விதமாக அடுத்த வீட்டுக் காவல்நாய் அவர்களை நோக்கி வெறித்தனமாக ஓடிவந்தது. அதை பார்த்து ~~மயக்கில்~~ ரவியின் தங்கை பயந்துவிட்டாள். இதுவே அவள் மயங்கி விழுக் காரணம் ஆகும்.

36) முரளி ஆடாமலும் அசையாமலும் ஆணி அடித்தது போல் அதே இடத்தில் நின்றதால் தப்பித்தான். ரவி விரைந்து சென்று ஒரு மரத்தில் ஏறி தப்பித்தான்.

37) எப்போது பக்கத்து வீட்டுக்காரர் ஓடி வந்து நாயை கட்டிப் போட்டார்களோ அப்போது முரளி அவன் இருந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

38) வெறியுடன் நாய் துரத்தி வந்த போதும் அதை கண்டு பயந்து ஓடாமல் ஆணி அடித்தது போல் அதே இடத்தில் நின்ற முரளியின் செயலையை இச்சொற்றொடர் குறிக்கிறது.

39) ஓடுபவரைக் கண்டால் துரத்தி செல்வது விலங்குகளின் குணம். இதன் காரணமாக தான் நாய் என்னை விட்டு ஓணி ஓடிய உன்னை துரத்தியது என்று முரளி கூறினான்.

40) முரளி ஆபத்தை எதிர்கொண்ட போதும் அசராமல் நின்றான். மேலும் உயிருக்கு ஆபத்தான நேரத்திலும் பயம் கொள்ளாமல் வருவது வரட்டும் என மனவுறுதியுடன் இருந்தான். இவையே முரளியிடம் காணப்படும் சிறப்பு பண்புகள்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com